
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :31 July 2026*
கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்



# உமா மகேஸ்வரி கவிதைகளில் அகவயப் போராட்டமும் புற உலகச் சித்தரிப்பும்

# The Internal Struggle and Portrayal of the External World in Uma Maheswari' s Poetry

**முனைவர் ரெ.ராதிகா,** உதவிப் பேராசிரியை,தமிழாய்வுத் துறை, தனலட்சுமி சீனி வாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.

***Dr. R. Radhika jayaprakash,*** *Assistant Professor of Tamil, Dhanalakshmi Srinivasan Women' s arts and Science College,(Deemed University) Perambalur, Tamil Nadu, India*

***Abstract***

*The contribution of women poets who emerged in the post-nineties landscape of modern Tamil poetry is distinctly unique. Among them, the poems of Uma Maheswari meticulously record the complexities of contemporary women's lives and their psychological distress. This paper aims to analyze the subjective (internal) struggles of women and the depiction of the external world as manifested in Uma Maheswari's poetry.The study explores how Uma Maheswari textualizes women's subjective struggles, such as loneliness, yearning, loss of identity within the familial structure, and forced silence. Simultaneously, it discusses the handling of external factors, including the surrounding society, its patriarchal tendencies, domestic violence, and nature, which often serves as a sanctuary for women.Through this analysis, the study reveals that the female persona in Uma Maheswari' s poems is not merely reduced to a victim of oppression; rather, she emerges as an individual seeking self-identity and liberation through her internal and external conflicts. This paper provides a crucial perspective on evaluating contemporary poetry through a feminist lens.*

***Keywords:***

*Uma Maheswari, Modern Poetry, Subjective Struggle, Depiction of External World, Feminism, Self-Identity, Loneliness.*

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழ் புதுக்கவிதை பரப்பில் தொண்ணூறுகளுக்குப் பின் உருவான பெண் கவிஞர்களின் பங்களிப்பு தனித்துவமானது.அவற்றுள், கவிஞர் உமா மகேஸ்வரியின் கவிதைகள் சமகாலப் பெண்ணின் வாழ்வியல் சிக்கல்களையும், அவளது மன அவஸ்தைகளையும் மிக நுட்பமாகப்

பதிவு செய்துள்ளன. இக்கட்டுரை, உமா மகேஸ்வரியின் கவிதைகளில் வெளிப்படும் பெண்களின் அகவயப் போராட்டங்களையும், அவர்கள் எதிர்கொள்ளும் புற உலகச் சித்தரிப்புகளையும் பகுப்பாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெண்ணின் அகம் சார்ந்த தனிமை, ஏக்கம், குடும்பக் கட்டமைப்பிற்குள் ஏற்படும் அடையாள இழப்பு, மௌனம் ஆகிய அகவயப் போராட்டங்களை உமா மகேஸ்வரி எவ்வாறு மொழியாக்கம் செய்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. அதே வேளையில், பெண்ணைச் சுற்றியுள்ள சமூகம், அதன் ஆணாதிக்கப் போக்கு, குடும்ப வன்முறைகள், மற்றும் அவளுக்குப் புகலிடம் தரும் இயற்கை போன்ற புற உலகக் கூறுகள் கவிதைகளில் கையாளப்பட்டுள்ள விதம் குறித்தும் விவாதிக்கிறது. இவ்வாய்வுக் கட்டுரையின் வழியே, உமா மகேஸ்வரியின் கவிதைகளில் வரும் பெண் பிம்பம் வெறும் ஒடுக்கப்பட்டவளாக மட்டும் சுருங்காமல், தன் அக-புறப் போராட்டங்களின் வழியே சுய அடையாளத்தையும் விடுதலையையும் தேடும் ஆளுமையாக உருவெடுக்கிறாள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. பெண்ணிய நோக்கில் சமகாலக் கவிதைகளை மதிப்பிட இக்கட்டுரை ஒரு முக்கியப் பார்வையை வழங்குகிறது.

**திறவுச் சொற்கள்:**

உமா மகேஸ்வரி, புதுக்கவிதை, அகவயப் போராட்டம், புற உலகச் சித்தரிப்பு, பெண்ணியம், சுய அடையாளம், தனிமை.

**முன்னுரை**

தமிழ் புதுக்கவிதை வரலாற்றில் தொண்ணூறுகளுக்குப் பிந்தைய பெண் கவிஞர்களின் வரவு மிக முக்கியமானது.விளிம்புநிலை மனிதர்களின் குரலையும், பெண்ணின் அக உலகப் பாடுகளையும் கவிதைகளாக்கியவர்களில் கவிஞர் உமா மகேஸ்வரி முதன்மையானவர்.'நட்சத்திரங்களின் நடுவே', 'வெறும் பொழுது', 'கற்பாவை' போன்ற இவரது கவிதைத் தொகுப்புகள் சமகாலப் பெண்ணின் வாழ்வியலை அசாத்தியமான மொழியில் பதிவு செய்துள்ளன. பெண்ணின் வாழ்வு என்பது அவளது தனிப்பட்ட மன உணர்வுகள் சார்ந்த அகவய உலகம் அவளைச் சுற்றியுள்ள சமூகம், குடும்பம், இயற்கை சார்ந்த புற உலகச் சித்தரிப்பு ஆகிய இரு துருவங்களுக்கு இடையேதான் சுழல்கிறது. உமா மகேஸ்வரியின் கவிதைகள் இந்த இரண்டு நிலைகளையும் வெவ்வேறாகப் பார்க்காமல், ஒன்றுடன் ஒன்று பிணைந்த ஒன்றாகவே காட்சிப்படுத்துகின்றன. பெண்ணின் அகம் சந்திக்கும் ஏமாற்றங்கள், தனிமை, ஒடுக்குமுறை மற்றும் புற உலகில் அவள் எதிர்கொள்ளும் சவால்கள், இயற்கையுடனான அவளது பிணைப்பு ஆகியவற்றை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**உமா மகேஸ்வரியின் கவிதைகளில் அக வெளிப்பாடு (தனிமை)**

பெண்ணின் உலகம் பெரும்பாலும் வீட்டுச் சுவர்களுக்குள்ளேயே சுருங்கிவிடுகிறது.சமையலறைப் பொருட்களோடும், வீட்டு வேலைகளோடும் கழியும் அவளது வாழ்வில், புற உலகம் ஒரு சன்னல் வழியாகத் தெரியும் துண்டு ஆகாயமாகவே இருக்கிறது.உமா மகேஸ்வரியின் கவிதைகளில் இடம்பெறும், ஆகாயம் எனும் சொல் சன்னல் வழியாகத் தெரியும் சிறு பகுதி பெண்ணின் மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்தைக் குறிக்கிறது.

இத்தகைய சூழலில் ஒரு பெண் எதிர்கொள்ளும் மனநெருக்கடிகளையும், சலிப்பையும், அவளது உள்ளார்ந்த தேடல்களையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.பெண்ணின் உலகம் என்பது வெளிப்படையான செயல்பாடுகளைக் காட்டிலும், அவளது மனதிற்குள் நிகழும் போராட்டங்களாலும் சலனங்களாலும் ஆனது.சமையலறைக்கும் வெளி உலகிற்கும் இடையே ஊசலாடும் அவளது வாழ்வு, தனிமை, சுதந்திர வாஞ்சை மற்றும் சமூக அழுத்தங்களால் ஏற்படும் சலிப்பு ஆகியவற்றால் கட்டமைக்கப்படுபவை.வாழ்வின் போராட்டங்கள், ஏமாற்றங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே ஒரு தனிமனிதன் எதிர்கொள்ளும் மன ரீதியான போராட்டங்களே அகவயச் சிக்கல்களாக வெளிப்படுகின்றன.

உமா மகேஸ்வரியின் கவிதைகளில் தனிமை என்பது ஒரு தீவாக உருவகப்படுத்தப்படுகிறது.புறவுலகின் இரைச்சல்களுக்கு நடுவிலும் மனம் தனித்து விடப்படுவதை அவர் சுட்டுகிறார்.

**"நானிருக்கும் தீவின் நடுவில்,**
**நினைவோரக் கசப்புப் போல்**
**வெயில் சுருளும் வெளியே" (உமாமகேஸ்வரி, வெறும் பொழுது,ப.26)**

மேலும் தனிமையை ஒரு பட்சியுடன் ஒப்பிடுகிறார்.

**"அலகு தீட்டும் தனிப்பட்சி போல் மனசு,**
**எதுவுமற்ற எதற்கோ ஆயத்தமாகி..." (மேலது, 32)**

ஒரே மாதிரியான வேலைகளும், மாறாத தினங்களும் மனதிற்குள் பெரும் சலிப்பை உருவாக்குகின்றன."மாறாத தினங்களின் ஓரங்களை மடித்தபடி" வாழ்வதாகக் கவிஞர் குறிப்பிடுவது, காலமாற்றமே இல்லாத ஒரு தேக்க நிலையைக் காட்டுகிறது."திரும்பத் திரும்பத் துடைப்பினும்" நீங்காத விகாரச் சுவடுகளைச் சுமக்கும் தரை போல, பெண்ணின் மனமும் சலிப்பால் பாரமாகிறது.

அஞ்சறைப் பெட்டி வட்டத்திற்குள்ளேயே ஒரு பெண்ணின் வயது இசைக்கப்பட்டு முடிந்துவிடுகிறது.இங்கு அஞ்சறைப் பெட்டி என்று ஆசிரியர் குடும்பப் பொறுப்புகளுக்குள் முடங்கிய பெண்ணின் வாழ்நாள் சுழற்சியாக வெளிப்படுத்துகிறார்.கிளறிய பொரியல்களும்,

காய்ச்சிய பாலுமே அவளது சித்திரத்தின் கோடுகளாக மாறுகின்றன.வீட்டு வேலைகளுக்கு நடுவே, ஒரு பெண்ணின் கனவுகளும் ஆசைகளும் சிதைக்கப்படுவதை இக்கவிதைகள் உணர்த்துகின்றன.கரண்டி மோதலும், கடுகு பொரிதலும் அடங்கும் அந்த "ராட்சஸ நிசப்தத்தில்", அவளது மனக்குமுறல்கள் மிரண்டு அடங்குகின்றன.பெண்ணின் அகவயச் சிக்கல்களில் முதன்மையானது அவளது மௌனம்.தான் சொல்ல நினைக்கும் உணர்வுகள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுமோ என்ற அச்சம் அவளைத் தனிமைக்குள் தள்ளுகிறது.பெண் தனது மன உணர்வுகளைப் பகிர முற்படும்போது ஏற்படும் சமூகத் தடைகளை இந்தக் கவிதை வரிகள் விளக்குகின்றன.

**"மனவலிகள் சொல்லலாமென்றால் புலம்பல் என்றாகும்**
**மகிழ்வைப் பகிர்ந்தாலோ சுயதம்பட்டம்"(உமாமகேஸ்வரி, வெறும் பொழுது, ப.44)**

இக்கவிதை ஓர் பெண் தன் வலியைச் சொன்னால் அது அழுகையாகவும், வெற்றியைச் சொன்னால் அது கர்வமாகவும் பார்க்கப்படும் என்ற சமூகப் பார்வையால் அவள் பல நேரங்களில் மௌனமாகிறாள் என்பதை முன்வைக்கிறது.

மற்றவர்களின் விமர்சனங்களுக்கு அஞ்சி, தனது உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள முடியாமல் "எனதெல்லாம் என்னோடு" என்ற இறுக்கமான நிலைக்கு அவள் தள்ளப்படுகிறாள்.அவளது மௌனம் என்பது வெறும் அமைதி அல்ல; அது பேசப்படாத பல சொற்களின் தொகுப்பு. மனதின் தனிமை மற்றும் தேடல் குறித்து கவிஞர் ‘‘மகுடேஸ்வரன்’’ வரிகள்:

**"தனிமை என்பது வெறும் வெறுமையல்ல,**
**தன்னைத் தானே கண்டடையும் பெருவெளி."**

**- கவிஞர் மகுடேஸ்வரன், மகுடேஸ்வரன் கவிதைகள் தொகுதி 2, ப.56**

மற்றவர்கள் தரும் அங்கீகாரத்தை விட, தனிமையில் உங்களுக்கு நீங்களே தரும் அங்கீகாரமே உங்களை முழுமையாக்கும்.தனிமை என்பது ஒரு தண்டனை அல்ல; அது ஒரு தவம் என்று கவிஞர் மகுடேஸ்வரன் குறிப்பிடுகிறார்.தனிமை என்பது வெறுமை அல்ல, அது ஒருவகை 'சுய சுதந்திரம்' என கவிஞர் வரையறுக்கிறார்.பொட்டல் வெளியில் நிற்கும் ஒற்றைப் பனைமரம் போலத் தனித்திருந்து, நட்சத்திரங்களுக்கிடையே திரிந்து கவிதைகளைச் சேகரிக்குமாறு அவர் அறிவுறுத்துகிறார்.

**"தனித்திரு!**
**தெருவோர விளக்குப்போல்...**

**உனக்கு நீயே வெளிச்சம் சிந்து."(உமாமகேஸ்வரி, உமாமகேஸ்வரி கவிதைகள் தொகுதி 1, ப.26)**

**57**

"தனிமை என்பது ஒரு தவம்" என்ற கருத்தை ஒட்டி, பாரதியார் தனது கவிதைகளில் தனிமையின் வலிமையைப் போற்றியுள்ளார்.

**சகிப்பு**

ஒரே மாதிரியான வாழ்க்கைச் சூழல் மற்றும் வீட்டு வேலைகள் பெண்ணிற்கு மிகுந்த சலிப்பைத் தருகின்றன.சமையலறையின் பாத்திரங்களோடு கழியும் அவளது வாழ்வு, அவளது முகபாவனைகளைக்கூட மாற்றியமைக்கிறது.வீட்டு வேலைகளுக்குள் சுருங்கிப்போகும் பெண்ணின் மனச்சோர்வை இந்தக் கவிதை படம் பிடித்துக் காட்டுகிறது.

**"இருந்திருந்து நீண்டால்**
**சமையல் கோலம்**
**சலித்து நகர்ந்தால்**
**சரியான உம்மணாம் மூஞ்சி"(உமாமகேஸ்வரி, உமாமகேஸ்வரி கவிதைகள் தொகுதி 1, ப.66)**

அன்றாட வீட்டு வேலைகளால் ஏற்படும் சலிப்பும், மௌனத்தின் ஆழமும் இக்கவிதையில் பேசப்படுகிறது.சமையலறையில் நீண்ட நேரம் செலவிடும்போது ஏற்படும் சலிப்பு, அவளது முகபாவனையில் வெளிப்படும்போது அது விமர்சனத்திற்குள்ளாகிறது.இயந்திரத்தனமான வாழ்வில் இருந்து விடுபட நினைக்கும் ஒரு மனம், சமையலறை ஜன்னல் வழியாகத் தெரியும் மலைத்தொடரைக் கண்டு திகைத்து நிற்கிறது.தேடல்கள் பலனளிக்காத போது ஏற்படும் சோர்வையும், மீண்டும் மீண்டும் அதே சுழற்சியில் சிக்கும் சலிப்பையும் கவிதைகள் பேசுகின்றன.

**"மூளை கசங்கியும்**
**தாள்கள் நிரம்பியும்**
**முழுதாவதில்லை" (உமாமகேஸ்வரி, உமாமகேஸ்வரி கவிதைகள் தொகுதி 2, ப.77)**

பொருந்தாத வடிவங்களை ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஏற்படும் விரக்தியைப் பதிவு செய்கிறார்.

**உமா மகேஸ்வரி கவிதைகளில் புறவயச்சிக்கல்கள்**

உமா மகேஸ்வரியின் கவிதைகள் பெண்ணின் அக உலகையும், புறச் சூழலையும் மிக நுட்பமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.இயற்கை, பெண்ணியம், சமுதாயம் எனப் பல்வேறு பரிமாணங்களில் அவரது கவிதைகள் அமைந்திருப்பதை நம்மால் அறியமுடிகிறது.

**"சம்பிரதாய அணைப்புகளில்**

***உலோக ஓரம் பதியாமல்...***

***அவரவர் கத்தியின் வண்மத்தை***

***அடி மனதில் நட்டு மூடுகிறோம்" - (மேலது, ப.46)***

*மனித மனதின் சிக்கல்களையும், புறச் சூழ்நிலையால் ஏற்படும் அழுத்தங்களையும் அவர் விளக்குகிறார்.'வண்மம்' என்ற கவிதையில் மனிதர்களுக்கு இடையிலான போலித்தனத்தைச் சாடுகிறார்.மனித உறவுகளுக்குள் ஒளிந்திருக்கும் கசப்புகளையும், வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள முடியாத மனப்போராட்டங்களையும் 'சிலந்தி' கவிதை மூலம் அவர் விளக்குகிறார்.*

***"மனதின் இடுக்கில் இழைகள்***

***விரித்துக் காத்துக் கிடக்கும்...***

***நினையாத் தருணங்களில்,***

***எதிர்முகத்தில் கொடுக்கைச் சுழற்றி***

***சொடுக்கும் வார்த்தை நஞ்சை" [மேலது,ப.9]***

*மனித மனதிற்குள் இருக்கும் வெறுப்பு மற்றும் கோபம் போன்ற மறை குணங்களைச் சிலந்தியாக உருவகப்படுத்துகிறார்.இது சமூக உறவுகளில் நிலவும் சிக்கலான மனநிலையைப் பிரதிபலிக்கிறது.உமா மகேஸ்வரியின் கவிதைகள் ஒரு பெண்ணின் உலகம் சமையலறை மற்றும் வீட்டுச் சுவர்களுக்குள் முடக்கப்படுவதை ஆழமாகப் பேசுகின்றன."அச்சுப் பிசகாத ஆண்களின் நிழல்கள் நீள்கிற சுவர்களுக்குள்" ஒரு பெண் தனது மாறாத தினங்களை மடித்துக் கொண்டு நிற்பதாக அவர் குறிப்பிடுகிறார்.இது குடும்ப அமைப்பில் பெண்ணின் தனித்துவம் மறைக்கப்படுவதைக் காட்டுகிறது. பாரதியார் பாடியது போல,*

***"ஏட்டையும் பெண்கள் தொடுவது***

***தீமையென்று எண்ணி யிருந்தவர்***

***மாய்ந்து விட்டார்"***

***- பாரதியார்***

*ஆனால் உமா மகேஸ்வரியின் கவிதையில் அந்தத் தடைவிதிகள் இன்னும் "கருங்கற்களாக" நீடிப்பதை உணர முடிகிறது. உமா மகேஸ்வரியின் வரிகள் வாழ்வின் யதார்த்தத்தைச் சொல்கின்றன. புறவயச் சிக்கல்கள் ஒருபுறம் இருந்தாலும், ஒரு மிடறு நீராகக் கிடைக்கும் புன்னகையைத் தியானிப்பதன் மூலம் மன உறுதியையும் அவர் பதிவு செய்கிறார்.*

***"எனதெல்லாம் என்னோடு எனும் இறுக்கம் விலகாது" - (உமாமகேஸ்வரி, உமாமகேஸ்வரி கவிதைகள் தொகுதி 1, ப.66)***

*என்ற வரி, சமூக எதிர்பார்ப்புகளுக்கு இடையே ஒரு பெண் எதிர்கொள்ளும் தனிமையைப் பிரதிபலிக்கிறது.பெண்கள் பொதுவாக ஏதேனும் பேசத் தொடங்கினால், அது புடவை அல்லது நகையைப் பற்றியதாகத்தான் இருக்கும் என்ற பொதுப்புத்தியைச் சாடுகிறார்.*

உமா மகேஸ்வரியின் கவிதைகள் அன்றாட வாழ்வின் சாதாரண நிகழ்வுகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் ஆழமான உளவியல் சிக்கல்களையும், மனித மனதின் விசித்திரங்களையும் நுட்பமாகப் பேசுகின்றன. மனித முகங்களை வெறும் சதைக் கோளங்களாகப் பார்க்காமல், அவை அனுபவங்களின் வெளிப்பாடுகள் என்கிறார் கவிஞர்.

இரவின் அழுத்தத்தில் அலைந்து திரியும் முகங்களின் சங்கீதத்தைக் கவனிக்குமாறு கூறுகிறார்."முகமே மனதின் பிரதிகள்" என்று குறிப்பிடுவதன் மூலம், ஒருவரின் அக உணர்வுகள் அவரது முகத்திலேயே பிரதிபலிக்கின்றன என்பதை வலியுறுத்துகிறார்.பேருந்து ஜன்னல்கள், நெரிசலான தெருக்கள் மற்றும் வீட்டிற்குள்ளும் முகங்கள் தொடர்ந்து கிளைத்துப் பரவி அசைந்தபடி இருக்கின்றன.தனிமை மற்றும் மனப் போராட்டங்களைச் சொல்லடுக்குகளால் கவிஞர் காட்சிப்படுத்துகிறார்.உடைந்த மனதை மூடி மறைக்க முயலும் உதட்டு நெளிவிற்கு 'சிரிப்பு' என்று பெயர் சூட்டப்படுவதாகக் கூறி, சமூகத்திற்காக அணியும் முகமூடியை விமர்சிக்கிறார்.

யோசனை வரப்பில் கவனமாகத் தடம் பதிக்கும் மனம், வலியிலிருந்து விழிப்புணர்வை நோக்கி நகர்வதை ஒருவித சுயக் கட்டுப்பாடாகக் கருதுகிறார்.சுதந்திரமில்லாது சுவரில் தொங்கும் ஓவியம் போல, நிசப்தத்தின் சுவர்களில் முகங்கள் பிடிவாதமாய் தொங்குகின்றன.மரணமும் துயரமும் வாழ்வின் அங்கங்கள் என்பதை இயற்கை மற்றும் அன்றாடப் பொருட்கள் வழியே விளக்குகிறார்.வாசலில் மரணம் நிற்பதை அறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் ஒரு பூவைத் தொடுப்பது எப்படி என்று வியக்கிறார்.இதற்குத் தன் மனமே ஒரு நூலாக மாற வேண்டும் என்கிறார்.

**தன்னம்பிக்கை மற்றும் நம்பிக்கை**

வாழ்வின் தடைகளைத் தாண்டி எழும் நம்பிக்கையை அவரது கவிதைகள் பறைசாற்றுகின்றன.

**"என்றேனும் ஒரு நாள் காற்றடிக்கும்...**
**பழுத்த இலைகள் இறக்க,**
**எங்கெங்கும் புதுமை ஜனிக்கும்" - (மேலது,ப.13)**

இக்கவிதை பெண்ணின் வலிகளை மட்டும் பேசாமல், அந்த வலிகளிலிருந்து மீண்டு வரும் நம்பிக்கையையும், வாழ்வின் எதார்த்தங்களையும் ஒருங்கே வெளிப்படுத்துகின்றன.

**“உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து"**

**- குறள்: 596**

இக்குறள் வழி வள்ளுவர் நினைப்பதையெல்லாம் உயர்ந்ததாகவே நினைக்க வேண்டும்; அந்த எண்ணம் நிறைவேறாவிட்டாலும், அத்தகைய உயரிய நோக்கம் கொண்டிருப்பதே

மனத்தளர்ச்சி அடையாத பெருமையை ஒருவருக்குக் கொடுக்கும் என்பதை உணர்த்துகிறார்.தனிமையையும் சோதனைகளையும் கடந்து செல்வதற்கான வலிமையை அவர் வலியுறுத்துகிறார்.

**"எதுவும் செய்யக் கூடுவதில்லை என்னால்**
**என்னுள் இருக்கும் இந்தச் சிலந்தியை"** *[- மேலது,ப.10].*

உமா மகேஸ்வரியின் இக்கவிதை அன்றாட வாழ்வின் நுணுக்கமான உணர்வுகளையும், ஒரு பெண்ணின் அக உலகையும் மிக மென்மையாக, அதேசமயம் வலிமையாகப் பதிவு செய்கின்றன.தன்னிடம் உள்ள குறைகளைத் (சிலந்தி) திருத்திக் கொள்ள முடியாவிட்டாலும், அதனுடன் பழகி, வாழ்வைத் தொடரும் பக்குவமே ஒரு வகை நம்பிக்கைதான்.

**"யாதானும் நாடாமா ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு"**
**- குறள்:397**

கற்றவனின் அறிவும் திறமையும் அவனுக்கு எங்கு சென்றாலும் மரியாதையையும், வாழ்வாதாரத்தையும் பெற்றுத் தரும்.என்று கல்வியும் அறிவும் தரும் தன்னம்பிக்கை பற்றி வள்ளுவர் கூறுகிறார்.வாழ்வின் சலிப்புகளுக்கு இடையிலும், ஒரு சிறு புன்னகையோ அல்லது தியானமோ ஒருவரை உயிர்ப்புடன் வைத்திருக்கும் என்ற நம்பிக்கையை இவர் வழங்குகிறார்.

**"அந்த ஒரேயொரு புன்னகையையே**
**நான் தியானிக்கிறேன்**
**அதன் தண்மை நெளியட்டும்**
**என் தாகத்திற்குள்"**
**- ஈரோடு தமிழன்பன்**

என்று கவிஞர் ஈரோடு தமிழன்பன் கூறுவது போல, "விழுந்தால் நிலம், எழுந்தால் வானம்" என்ற தன்னம்பிக்கை இவரின் தியானிக்கும் மனநிலையிலும் வெளிப்படுகிறது.சமையலறை என்பது பெண்ணின் வாழ்விடமாக மட்டுமன்றி, அவளது கனவுகளும் எதார்த்தமும் மோதிக்கொள்ளும் இடமாகவும் அமைகிறது. ஒரு பெண் சமையலறையிலேயே நீடித்தால் அது "சமையல் கோலம்" என்றும், அங்கிருந்து சலித்து நகர்ந்தால் அவர் "உம்மணாம் மூஞ்சி" என்றும் விமர்சிக்கப்படுவதே பெண்ணின் நம்பிக்கையாகிறது. ஓர் பெண்ணின் புதிய சிந்தனைகள் திருமணத்திற்கு பிறகு பெரும்பாலும் சமையலறையிலேயே தோன்றுகிறது. உமா மகேஸ்வரியின் கவிதைகள், சமையலறையின் ஜன்னல் வழியாகத் தெரியும் மலைகளையும், மௌனங்களுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் உணர்வுகளையும் மிக நுட்பமாகப் படம்பிடிக்கின்றன. "எடை கூடிய கடந்த காலத்தைச்

சுமக்காமல்" நகரும் வாழ்வைப் போற்றும் அதே வேளையில், பெண்ணின் அக உலகச் சிக்கல்களை வலிமையுடன் பதிவு செய்கின்றன.

உமா மகேஸ்வரி கவிதைகள் மனித மனதின் இருள், போராட்டம், தனிமை மற்றும் இயற்கையின் வழியே வெளிப்படும் மன உறுதி (தன்னம்பிக்கை) ஆகியவற்றை நுட்பமாகச் சித்தரிக்கின்றன.வாழ்வின் சவால்களை ஒளியின் போராட்டமாக கவிஞர் உருவகப்படுத்துகிறார்.விளக்கின் திரியை இழுத்து இறக்கி ஒளியை அணைக்க முயலும் "அன்னிய விரல்கள்" வாழ்வின் தடைகளைச் சுட்டுகின்றன.

ஒளியை விழுங்க வரும் "காற்றின் ஊளை" மற்றும் "இருளின் தந்திரமான கருமை" ஆகியவை மனிதனைச் சூழ்ந்துள்ள எதிர்மறைச் சூழல்களைக் குறிக்கின்றன.இத்தனை அலைச்சல்களுக்கு இடையேயும், "என் குட்டிச்சுடரே, உன்னை ஏற்றுவேன்" என்று கூறுவது தளர்ந்து போகாத தன்னம்பிக்கையின் அடையாளமாகும்.இயற்கையின் எளிய கூறுகள் மூலம் ஆழமான வாழ்வியல் தத்துவங்களை இக்கவிதைகள் முன்வைக்கின்றன.

**சமுதாயம்**

சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும், பெண்களின் நிலையையும் அவரது கவிதைகள் சுட்டிக்காட்டுகின்றன.

**"முருகேஸ்வரிக்குப் பிறந்ததும்**

**நெரிபட்ட மூன்றாவது பெண் குழந்தை" -(உமாமகேஸ்வரி, உமாமகேஸ்வரி கவிதைகள் தொகுதி 2, ப.26)**

மீன்காரம்மாவின் மகள் பதினான்கிலேயே தாலியறுத்த அவலத்தைச் சமூகத்தின் செய்தியாகப் பதிவு செய்கிறார்.சமூகம் ஒரு பெண்ணின் மீது சுமத்தும் எதிர்பார்ப்புகளையும், திருமணத்திற்குப் பிறகு அவளது அடையாள மாற்றத்தையும் அவர் விமர்சிக்கிறார்.

**"மாறுதலாக்கியது திருமணம்...**

**திரும்பி வந்து தேடினால் பிரிந்த**

**நூலிழைகளாய்த் திரிந்திருந்தது அதுவும்" [மேலது, ப.29].**

திருமணத்திற்குப் பிறகு ஒரு பெண்ணின் பழைய உலகம் அல்லது அடையாளம் சிதைந்து போவதைச் சமூக எதார்த்தமாகப் பதிவு செய்கிறார்.

**"மாதர் தம்மை இழிவு செய்யும்**

**மடமையைக் கொளுத்துவோம்"**

**- பாரதியார்**

பெண்களைத் தாழ்வாகக் கருதும் அறியாமை நிறைந்த பழக்கவழக்கங்களையும், சட்டங்களையும் அழித்து ஒழித்து, பெண்மையை போற்ற வேண்டும் என்பதே பாரதியின் முழக்கம்.அதையொட்டியே உமாமகேஸ்வரியும் கவிதைப் படைக்கிறார்.சமுதாயம் பெண்ணின்

மேல் சுமத்தியுள்ள எதிர்பார்ப்புகளையும், சிறுவயது திருமணத்தின் குமுறல்களையும் இக்கவிதைகள் தொட்டுச் செல்கின்றன.சமையலறைப் பொருட்களுடன் ஒரு பெண்ணின் கனவுகள் கரைந்து போவது சமுதாய அவலத்தின் பிரதிபலிப்பாகும்.

**"கரண்டி மோதலும், கடுகு பொரிதலும்**

**ராட்சஸ நிசப்தத்தில் அடங்கும் மிரண்டு" -(உமாமகேஸ்வரி, உமாமகேஸ்வரி கவிதைகள் தொகுதி 1, ப.51)**

புகுந்த வீட்டில் ஒரு வேலைக்காரியாகவோ அல்லது கனவுகள் கருகிய நிலையிலோ இருக்கும் பெண்களின் நிலையை "சிறுவயதில் திருமணம் ஆன பெண்ணின் குமுறல்" என்று கவிதை விளக்குகிறது.

**முடிவுரை**

உமா மகேஸ்வரியின் கவிதைகள் வெறும் சொற்களின் சேர்க்கை அல்ல; அவை பெண்ணிய வாழ்வின் அழுத்தமான சாட்சியங்கள். அவளது கவிதைகளில் வரும் பெண், சமூகத்தின் பொதுப்புத்தி கட்டமைத்துள்ள 'மென்மையானவள்' என்ற பிம்பத்தை உடைக்கிறாள். அகவயப் போராட்டம் தனிமை, ஏக்கம், குடும்ப அமைப்பிற்குள் ஏற்படும் அடையாளச் சிக்கல் ஆகியவற்றை உமா மகேஸ்வரி மிக நுட்பமாகப் படம்பிடித்துள்ளார்.பெண்ணின் மனக் குமுறல்களை மௌனத்தின் மொழியில் கடத்துகிறார். புற உலகச் சித்தரிப்பு சமூகம் பெண்ணின் மீது சுமத்தும் பாத்திரங்கள், வன்முறைகள் மற்றும் புறக்கணிப்புகளை எதார்த்தமான மொழியில் சாடுகிறார்.அதே நேரத்தில், புற உலகின் அங்கமான இயற்கையைத் தன் துயரங்களை ஆற்றும் ஒரு தோழமையாகவும் அவர் காண்கிறார். ஆகவே, உமா மகேஸ்வரி தன் கவிதைகளின் வழியே பெண்ணை வெறும் பலியாக மட்டும் காட்டாமல், தன் அகப்போராட்டங்களின் வழியே சுய அடையாளத்தைத் தேடும் ஒரு கலகக்காரியாகவும், புற உலகைச் சகித்துக்கொண்டு வெல்லத் துடிக்கும் ஆளுமையாகவும் செதுக்கியுள்ளார். பெண்களின் அக-புற உலகச் சிக்கல்களைப் புரிந்துகொள்வதற்கும், சமகாலப் பெண்ணியக் கவிதைகளின் போக்கை மதிப்பிடுவதற்கும் உமா மகேஸ்வரியின் கவிதைகள் மிக முக்கியக் கொடையாகும் என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கவிதைகள் தொகுதி -1, வம்சி புக்ஸ், திருவண்ணாமலை - 601 - முதற்பதிப்பு - 2022
2. உமா மகேஸ்வரி, உமா மகேஸ்வரி கவிதைகள் தொகுதி -2, வம்சி புக்ஸ், திருவண்ணாமலை - 601 - முதற்பதிப்பு - 2022

3. கவிஞர் முருகுவண்ணன் - கவிஞரும் கவிதையும், தமிழ் நெறி மன்றம் - சென்னை - முதற்பதிப்பு - 2023
4. "தமிழ் பெண் கவிஞர்கள், ஆதி மந்தியார் முதல் உமா மஹேஸ்வரி வரை", சொல்வனம், இதழ் 365, ஏப்ரல் 26, 2026. [இணைய இணைப்பு: https://share.google/zJdZcVr9ZwTn3wgNb
5. பாக்யமேரி. வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. பூவேந்தன் பதிப்பகம், சென்னை, 600 004, பதிப்பு, 2019.
6. சூர்யா, அறிஞர்களின் பொன்மொழிகள், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை - 017, பதிப்பு 2022

Bibliography

1. Uma Maheswari, *Uma Maheswari Kavithaigal Thoguthi - 1* (Uma Maheswari's Poems: Volume 1), Vamsi Books, Tiruvannamalai - 601 - First Edition - 20222.

Uma Maheswari, *Uma Maheswari Kavithaigal Thoguthi - 2* (Uma Maheswari's Poems: Volume 2), Vamsi Books, Tiruvannamalai - 601 - First Edition - 2022

3. Poet Muruguvannan - *Kavignarum Kavithaiyum* (The Poet and the Poem), Tamil Neri Mandram - Chennai - First Edition - 2023

4. "Tamil Pen Kavignargal, Aathi Mandhiyar Mudhal Uma Maheswari Varai" (Tamil Women Poets: From Aathi Mandhiyar to Uma Maheswari), *Solvanam*, Issue 365, April 26, 2026. [Web Link: https://share.google/zJdZcVr9ZwTn3wgNb]

5. Bagyamary, *Vagaimai Nokkil Tamil Ilakkiya Varalaru* (History of Tamil Literature: A Genre-based Perspective), Poovendhan Pathippagam, Chennai - 600 004, Edition - 2019.

6. Surya, *Arignargalin Ponmozhigal* (Golden Sayings of Scholars), Sri Shenbaga Pathippagam, Chennai - 017, Edition - 2022

Send feedback

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com